www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 3rd Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| பரதநாட்டியம் Dance | Three Hours / Gr -12 (2023) | 53 | T | I,II |

### பகுதி I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. சிதம்பரத்தில் எழுந்தருளி இருக்கும் இறைவன்
    1) நடராஜர் 2) பார்வதி 3) விநாயகர் 4) முருகன் 5) கிருஷ்ணன்

02. கோவில்களில் நாள்தோறும் ப்ரம்மாவுக்கும், அஷ்டதிக்குப் பாலகர்களுக்கும் அன்னம் படைத்து வழிபடும் வழிபாடு.
    1) ஸ்ரீபலி 2) நவஸந்தி 3) நைமித்தியகிரியை
    4) நித்திய கிரியை 5) கும்பாபிசேகம்

03. வலது புறத்தில் சிதம்பர இரகசியம் இருக்கும் சபை யாது?
    1) சிற்சபை 2) தேவ சபை 3) நிருத்த சபை
    4) ராஜ சபை 5) ரஜித சபை

04. கதகளி நடனத்திற்கு புத்துயிர் கொடுத்து கேரள கலாமண்டலத்தை நிறுவியவர்.
    1) இராமுண்ணிமேனன் 2) கவி வள்ளத்தோல் 3) குருகுஞ்சுகுரு
    4) கொட்டாரக்கரை அரசன் 5) பேரய்யா ஸாஸ்திரி

05. சங்ககாலத்தில் வெறியாட்டம் செய்யும் பெண்ணை எவ்வாறு அழைத்தனர்.
    1) ஆடும் மகளிர் 2) கூத்தர் 3) கண்ணுளர்
    4) விறலியர் 5) கோடியர்

06. "ஆடம்பலமும் அரங்கமும் சாலையும் சேடனைக் காணிய சென்று தொக்கதுவே" எனும் பாடலடி அமைந்த நூல்
    1) சிலப்பதிகாரம் 2) மணிமேகலை 3) சீவக சிந்தாமணி
    4) வளையாபதி 5) குண்டலகேசி

07. ;;;;;;;;/, ததிங் கிண தொம் ததிங்கிண தொம் ததிங்கிண தொம் // அமைந்த ஜாதி
    1) சங்கீர்ணம் 2) மிஸ்ரம் 3) சதுஸ்ரம்
    4) கண்டம் 5) திஸ்ரம்

08. பெண்வேடம் தரித்த முதலாவது ஆண் நடனக் கலைஞர்.
    1) ஈ. கிருஷ்ணையர் 2) தனஞ்சயன் 3) சுப்பராய நட்டுவனார்
    4) அருணாசல நட்டுவனார் 5) மீனாட்சி சுந்தரம் பிள்ளை



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09. கத் பாவங்கள் பயன்படுத்தப்படும் சாஸ்திரிய நடனம்
1) மணிப்புரி 2) கதகளி 3) பரதநாட்டியம் 4) மோகினியாட்டம் 5) கதக்

10. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுபவன்
1) பலவீரன் 2) போர்வீரன் 3) தயாவீரன் 4) தானவீரன் 5) தர்மவீரன்

11. ஹாஸ்ய ரஸத்தில் புன்முறுவல் குறிப்பது.
1) ஹஸித்தம் 2) ஸ்மித்தம் 3) உபஹஸித்தம்
4) அதிஹஸித்தம் 5) விஹஸித்தம்

12. எலத்தாளம் பிரதானமாகப் பயன்படுத்தப்படும் ஆடல் வகை.
1) கதகளி 2) பரதநாட்டியம் 3) மணிப்புரி 4) ஒடிசி 5) கதக்

13. ஆலய வழிபாட்டில் சோடசோபசாரத்தில் நிருத்திய உபசாரம் என்பது.
1) வாத்தியம் 2) பண்ணிசை 3) நாட்டியம் 4) கீதம் 5) தீபாராதனை

14. சங்க காலத்தில் ஆடலில் உண்ணாட்டு எனும் ஆடல் வகையை குறிப்பிடும் நூல்
1) பட்டினப்பாலை 2) சிறுபாணாற்றுப்படை 3) தொல்காப்பியம்
4) மதுரைக்காஞ்சி 5) குறுந்தொகை

15. நாடகத்தில் பயன்படுத்தப்படும் மொழிகளில் பாமர மக்களுக்குரியது.
1) அதிபாஷை 2) ஆர்ய பாஷை 3) ஜாதி பாஷை
4) யூன்யந்தரி பாஷை 5) மௌனம்

16. சங்க காலத்தில் பெண்களால் ஆடப்பட்ட நடனம்
1) துணங்கை 2) வெறியாடல் 3) குரவை 4) கூத்து 5) வரிக்கோலம்

17. நடனத்தை நிகழ்த்தும் போது எவ்வித குறையும் வந்து விடக் கூடாது என்பதற்காக ஆடப்படும் நடனம்
1) வர்ணம் 2) நவஸந்திநாட்டியம் 3) பஞ்சசந்திக் கௌத்துவம்
4) கீர்த்தனை 5) புஷ்பாஞ்சலி

18. ஆய்ச்சியர் குரவை ஆடப்படும் பிரதேசம்
1) மருதம் 2) குறிஞ்சி 3) நெய்தல் 4) பாலை 5) முல்லை

19. பிண்டி பிணையல் பற்றிக் கூறும் நூல்
1) கூத்த நூல் 2) அபிநயதர்ப்பணம் 3) சங்கீதரத்னாகரம்
4) சிலப்பதிகாரம் 5) மகாபாரதச் சூடாமணி

20. நாட்டிய ஸாஸ்திரத்தில் உடல் உறுப்புக்களின் துணைகொண்டு நுட்பமான அபிநயங்களை விளக்கும் அத்தியாயம்
1) ஆறு 2) ஏழு 3) ஒன்பது 4) பத்து 5) எட்டு

(20 x 1 = 20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) பரதநாட்டியக் கச்சேரியில் சிகரம் போல் அமைக்கபட்ட உருப்படி. (1 புள்ளிகள்)

2) அவ் உருப்படியின் இராகம், தாளம் என்பவற்றைத் தருக. (4 புள்ளிகள்)

3) அவ் உருப்படியின் இலக்ஷணத்தை எழுதுக. (5 புள்ளிகள்)

4) பல்லவியில் வரும் முதலாவது தீர்மானத்தினை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. 1) சங்ககால இலக்கியங்கள் நான்கினை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

2) சங்ககால இலக்கியங்களில் காணப்படும் நடனங்களை குறிப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

3) சங்கமருவிய காலத்தை பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

1. நடனப் பெண் எவ்வாறு இருக்க வேண்டும் - 02
2. இசை ஆசிரியர் - 02
3. பதினொருவகை ஆடல் - 06

மொத்தம் 20 புள்ளிகள்

03. நடனக் கலையின் மறுமலர்ச்சி பற்றி தருக.

(20 புள்ளிகள்)

04. சிறுகுறிப்பு எழுதுக.

1) சிருங்காரம்

2) விபாவம்

3) ஆஹார்யா அபிநயம்

4) கிரஹம் (4x5 = 20 புள்ளிகள்)

05. மணிப்புரி நடனத்தினை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

1) இசைக்கருவி 4

2) ஆடை அணிகலன் 4

3) ஆட்டமுறை 6

4) தோற்றம் வளர்ச்சி 6

(20 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!